THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

September, 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

செப்டெம்பர், 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :—A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

மானேஜர் :—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பத்திரிகைக் கமிற்றி :—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்
„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
„ A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்
3. சிறுவர் பாகம்
4. பிரசங்கக் குறிப்புகள்
5. இயேசுவின் ஜெபப்பள்ளி
6. இளைஞரும் பணமும்
7. இரக்ஷணிய மனோகரம்
8. கி.மு. சங்கப்பொருட்கள்
9. விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த

மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XV பசுமலை, செப்டெம்பர் 1954 இலக்கம் 11

வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

இரண்டாவது சர்வலோக திருச்சபை மகாநாடு
இவான்ஸ்டன, இல்நாயி, அமெரிக்கா,
ஆகஸ்டு 24, 1954.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

அமெரிக்காவில் செலவிட்ட இரண்டரை வாரங்களும் பல அனுவங்கள் நிறைந்தவை அதே சமயம அவை சந்தோஷமுமானவை. மகாநாட்டின் அலுவல்களோடு அநேக இடங்களில் உபந்நியாசங்களும், ரேடியோவில் சொற்பொழிவுகளும் நிகழ்த்த நேரிட்டது. இந்திய சபைகளிலிருந்து 57 பிரதிநிதிகள் வந்திருக்கின்றனர். அதில் 18 பேர் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்தவர்கள். மகாநாட்டின் அலுவல்களில் நமது பிரதிநிதிகள் முக்கிய பாகங்களில் கலந்துகொள்ளுகிறார்கள். உலகத்தின் எல்லா பாகங்களிலுமுள்ளவர்களையும், 164 சபைகளையும் ஆலோசனை செய்யப்படும எல்லாக் காரியங்களிலும் ஓர்முகமாகக் கொண்டுவருவது மிகக் கஷ்டம். மகாநாடு சர்வலோகத்திற்கும அனுப்பும் செய்தியைத் தயாரிக்கும் கமிற்றிக்கு என்னைத் தலைமைவகிக்கக் கேட்டிருக்கிறார்கள். இது ஓர் பொறுப்பான வேலை. எங்களுக்காகவும செய்யப்படும் சேவைக்காகவும் நீங்கள் ஜெபிப்பீர்களென நம்புகிறேன.

இரண்டு நாட்களுக்கு முன் பானிங்கா பண்டிதரவர்களையும் அம்மாளையும் சந்தித்து அவர்களிடம் நமது சபைகளைப்பற்றிய செய்தியைச் சொன்னேன். அவர்களைச் சந்தித்தது எனக்கு அதிக சந்தோஷம். கனம் கோல்டிங் ஐயரவர்களையும் அம்மாளையும்

சந்தித்தேன் செப்டெம்பர்மீ தத்தில் அமெரிக்காவின் பற்பல பாகங்களிலுள்ள சபைகளையும், வேதசாஸ்திரக் கல்லூரிகளையும் சந்தித்து தென்னிந்திய திருச்சபையைப்பற்றிப் பேசுவேன்.

அனுதினமும் நமது ஆவிக்குரிய கூட்டங்களை ஜெபத்தில் நினைத்து வருகிறேன். நமது சபையின் ஜீவியம் புதுப்பிக்கப்படும்படி கடவுள் இந்த ஆவிக்குரிய கூட்டங்களைப் பிரயோஜிக்க நாம தொடர்ச்சியாய் ஜெபித்துவரும்படி உங்களனைவரையும் கேட்கிறேன்.

கடவுள்தாமே உங்களனைவரையும் ஆசீர்வதித்துக் காப்பாராக

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்.
அத்தியட்சர்

திருச்சபைச் செய்திகள்

1. சபையின் திருநாட்கள்.

அக்டோபர்	3	திரி. திரு. பின்ஞாயிறு 16 சர்வலோக நற்கருணை ஞாயிறு
,,	10	திரி. திரு பின் ஞாயிறு 17 மிஷனரி சங்க ஞாயிறு
,,	17	திரி. திரு. பின்ஞாயிறு 18
,,	18	பரி. லூக்காவின் திருநாள்
,,	24	திரி. திரு. பின் ஞாயிறு 19
,,	28	பரி. சீமோன், பரி. யூதா திருநாள்
,,	31	திரி. திரு. பின் ஞாயிறு 20

2. கமுதி பாஸ்டரேட் நெரிஞ்சில்பட்டியில் ஞானஸ்நான திருவிழா.

கடந்த 18 மாதங்களாக ஏற்பட்ட அசைவினிமித்தம் கமுதி பாஸ்டரேட் நெரிஞ்சில்பட்டிக் கிராமத்தில் 50 ஆத்துமாக்கள் கொண்ட 10 குடும்பத்தார் 1—7—54ல் மகாகனம் அத்தியக்ஷர் அவர்களால் கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்பட்டனர். சபையாரும், புதிதாகச் சபையில் சேருபவர்களும் முந்தின மாலை கனம் அத்தியக்ஷரவர்களையும் உடன் வந்தவர்களையும் தக்க மரியாதைகளு

டன் வரவேற்றனர். பின்பு ஞானதீட்சை பெறுபவர்களுக்காக விசேஷித்த போதனையை மகாகனம் அத்தியக்ஷரவர்கள் நடத்தி கேள்விகளும் கேட்டார்கள் பின்னர் ஞானதீட்சைக்ஷ ஆராதனை ஆரம்பமானது. அத்தியக்ஷர் ஆராதனையை நடத்த தெற்கு வட்டகைத் தலைவர் வேதப் பகுதிகளை வாசித்தார். மறு பிறப்பு என்பது பற்றி கனம் அத்தியக்ஷரவர்கள் சிறந்ததோர் விரிவுரை நிகழ்த்தினர். பின் அத்தியக்ஷரவர்கள் குடும்பத் தலைவரவர்களுக்கும் தெற்கு வட்டகைத் தலைவர் சிறுவர்களுக்குமாக ஞானதீட்சைக்ஷ கொடுத்தனர். அத்தியக்ஷரின் ஆசீர்வாதத்தோடு ஆராதனை முடிவடைந்தது. புதிய சபையாரும், இதர ஊர் பிரமுகர்களும் இரவில் மகாகனம் அத்தியக்ஷரவர்களையும் இதர பிரமுகர்களையும் மாலைகள் சூடிக் கண்டனர்.

மறுநாள் காலை புதிதாகக் கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்பட்டவர்களுக்காக விசேஷித்த ஆராதனையை அத்தியக்ஷரவர்கள் நடத்தினார்கள். இவ்வித அசைவுக்கு காரணமாயிருந்த எல்லாத் தலைவர்களுக்கும் நெரிஞ்சில்பட்டி சபையின் நன்றி உரித்தாகுக

புதிதாகக் கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்பட்ட ஆத்துமாக்களுக்காக நாம் ஜெபிப்போமாக. என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்று நம் ஆண்டவர் அருளிய அரிய உபதேசத்தை நினைப்போமாக என்று ஸ்ரீ சிமோன் ஜான்சன் ஆசிரியர் எழுதுகிறார்.

3. சிவகங்கை சபையின் வருடாந்திர ஸ்தோத்திரப் பண்டிகை.

சிவகங்கை சபையின் வருடாந்திர ஸ்தோத்திரப் பண்டிகை 8—8-54 ஞாயிறன்று கொண்டாடப்பட்டது ஞாயிற்றுக் கிழமை காலை ஸ்தோத்திர ஆராதனையும், நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது கிழக்கு லோக்கல் கவுன்சில் சேர்மன் அவர்கள் விசேஷித்த பிரசங்கம் செய்தார்கள். ஓய்வுநாள் பாடசாலை மாணவர்கள் கருத்துமிக்க பாடல்களைப் பாடினர். கனம் தானியேல் (நகர் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி) குழுவினர் ஆங்கிலப் பாட்டுகளைப் பாடினர். பின்பு ஏலத்திற்கு வந்திருந்த ஏராளமான பொருள்கள் ஏலத்திற்கு விடப்பட்டன.

அன்று மாலை ஆலயத்தின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள அரங்கத்தில் 'கார்னிவால்' (Carnival) நடத்தப்பட்டது. இங்குள்ள அரசர் துரைச்சிங்கம் நினைவுக் கல்லூரியின் பிரின்ஸ்பால் கனம் தண்டபாணி அவர்கள் திறந்து வைத்தார். பலவிதமான பலகாரக் கடைகளும், ஐஸ்கிரீம் ஸ்டால்களும் அமைக்கப்பட்டிருந்தன. விதவிதமான விளையாட்டுகளும், உவகையூட்டும் உரையாடல்

களும் இருந்தன. சபையார்களும், புறமதஸ்தர்களும் ஏராளமாக வந்து விழாவைச் சிறப்பித்தனர். கடந்த வருடத்தைவிட ஆவிக்குரிய விஷயத்திலும், காணிக்கை விஷயத்திலும் அநேக மடங்கு உயர்ந்துவிட்டதன் காரணம், சிவக்கங்கை சபையாரின் ஒற்றுமையும், ஊக்கமுமேதான்.

சபையின் ஸ்தோத்திரப் பண்டிகை ஓர் பெரிய விழாவாக, நடைபெற்றது புறமதஸ்தர்களுக்கு ஓர் சாட்சியாக இருந்தது. ஆண்டவர் தாமே இச்சபை அதிகமாக வளர்ச்சியடைய உங்கள் ஜெபங்களில் நினைக்கும்படி கனம் கிறிஸ்டோபர் எழுதுகிறார்.

4. சர்வலோக திருச்சபை மகாநாடு.

இது தற்போது அமெரிக்காவில் நடைபெற்று வருகிறதென ஏற்கனவே தெரிவித்தோம். அங்கு கூடியிருக்கும் தலைவர்களுடைய மனதில் ஆவியானவர்தாமே கிரியை செய்வதின் மூலம் அவர்கள் சபைகளின் ஒற்றுமைக்காகப் பாடுபடவும், சபையானது இவ்வுலகில் ஓர் சிறந்த சாட்சியாய் விளங்க அதைப் பலப்படுத்தவும நாம் ஜெபிப்போம். விசேஷமாய் நமது அத்தியட்சர் அம்மகாநாட்டிலும் அதன் பின் அமெரிக்க சபைகளிலும் செய்யும் ஊழியம் பலிதப்பட ஜெபித்து வருவோம்.

5. அத்தியட்சாதீன வருடாந்திர ஆவிக்குரிய கூட்டங்கள்.

இது அக்டோபர்மீ 5 - 9வரை மதுரை அமெரிக்கன் கல்லூரி சபாமண்டபத்தில் நடைபெறும். கூட்டங்களை நடத்த சென்னையைச் சேர்ந்த கனம் N. தானியேல் அவர்களும் அவருடைய கூட்டத்தாரும் வருவார்கள். கடவுளின் அருள்மாரி எல்லார்மேலும் வந்திறங்க நாம் யாவரும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

சிறுவர் பாகம்

"நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன்"
(1 கொரி. 7 : 32)

நம்முடைய கவலைகளுக்கு கணக்கில்லை பணமில்லாவிட்டால் கவலை, பணம் பெருகினாலும் கவலை, பிள்ளைப்பேறு இல்லாவிட்டால் கவலை, பிள்ளைகள் அதிகமானாலும் கவலை, வியாதிவந்தால் கவலை, கடிதம் வராவிட்டாலும் கவலை, கொடுக்கல் வாங்கலைப் பற்றியும கவலைதான். இப்பொழுது உங்கள் கவலை எதன்பேரில்?

நம்மில் அநேகர் பல சமயங்களில் இவ்வாறு பேசுகிறதில்லையா? "நான் கடவுளைத்தான் நம்பியிருக்கிறேன், அவரிடத்தில் என் கஷ்டங்களையெல்லாம் சொல்லியிருக்கிறேன் என்றாலும். என் மூத்த

மகளுக்கு கலியாணம் ஆகவில்லையே என்ற கவலைதான் என்னை வருத்துகிறது" — "கடவுள் தான் என் நம்பிக்கை என் சின்ன மகன் B. A பாஸ் பண்ணிவிட்டால் எனக்கு வேறு கவலையில்லை'' — "நான் ஜெபம் பண்ணிக்கொண்டுதான் இருக்கிறேன். என் வியாதி நீடிக்கிறதை யோசிக்கும்போதுதான் கவலையாயிருக்கிறது" இதென்ன நம்பிக்கை? இதென்ன ஜெபம்? .

சீனு தேசத்திலுள்ள ஒரு பட்டணத்தின் ரஸ்தாவில் ஒரு பாலமிருக்கிறதாம. அப்பாலத்தின் ஒருகோடியில் ஒரு சிறு கோயில் கட்டப்பட்டிருக்கிறதாம் அம்மார்க்கமாய் செல்லுகிறவர்கள் தங்கள் மூட்டை முடிச்சுகளை அப்பாலத்திலுள்ள கைப்பிடிச் சுவரின்மேல் வைத்துவிட்டு, அக்கோயிலுட்சென்று ஜெபித்துவிட்டு, திரும்பவும் தங்கள் சுமைகளை எடுத்துச் செல்வார்களாம். நம்மிலநேகருடைய காரியம் இப்படித்தானே! ஆலயத்துக்குப்போகும் சமயத்தில் நமது கவலைகளையெல்லாம் கோயில் வாசலில் வைத்து விடுகிறோம் அல்லது அவர் சமூகத்தில் வைக்கிறோம். -சிறிது நேரம் ஆறுதலோடு ஆராதனை செய்கிறோம்; ஆனால் ஆராதனைமுடிந்து வீட்டுக்குத் திரும்பும் போது நம்முடைய கவலைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு தான் வந்து விடுகிறோம் என்ன பிரயோஜனம்? கவலை ஆத்மசத்துரு, மனதைக்குழப்பி இருதயங்களை கலங்கச்செய்து சரீரத்தில் சோர்வையும் ஆவியில் தளர்ச்சியையும் உண்டுபண்ணி பெலனையும் ஒடுக்கி ஆயுளையும் குறைத்துப் போடும். ஆகையால் என் பிரிய சிநேகிதரே! கவலைப்படாதிருங்கள்

1 பேதுரு 5:7ல் சொல்லியபடி செய்யுங்கள்

"உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்"

(1 பேதுரு 5:7)

"ரஸ்தா மார்க்கமாய் ஒரு வண்டி போய்க்கொண்டிருந்தது. வண்டிக்குப் பின்னாலே ஒருமனுஷன் தலையில் ஒரு பாரத்தைச் சுமந்து கொண்டு கஷ்டத்தோடு வந்தான். அவன் வண்டிக்காரனைக் கூப்பிட்டு: ஐயா, பாரம் சுமக்க முடியவில்லை, வண்டியில் என்னை ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று கெஞ்சினான். வண்டிக்காரன் மனமிரங்கி அவனை ஏறிக்கொள்ளும்படி சொன்னான். சற்றுதூரம் சென்றபின் வண்டிக்காரன் திரும்பி அந்த மனுஷனைப்பார்த்து: பெரியவரே, இன்னும் தலைமேலே மூட்டையை ஏன் வைத்துக்கொண்டிருக்கிறீர் என்று கேட்க, அவன், எனக்குத்தானே வண்டியில் இடங்கொடுத்தீர், என் மூட்டைக்குமா என்றான் அதற்கு வண்டிக்காரன்: நீயும் உன்மூட்டையுஞ் சேர்ந்துதானே என் வண்டிக்குப் பாரம், அதை வண்டியில் வைத்துவிட்டால் உன் தலைப்பாரம் நீங்கி சுகமாயிருக்கலாமே என்றான். நமது கவலைகளை ஆண்டவருக்குச் சொல்லியும், மூட்டையை அவரிடம் விட்டுவிடாதிருந்தால், நமக்கு இளைப்பாறுதல்

இல்லை. "உன்னை ஏந்துவேன், சுமப்பேன், தாங்குவேன்" என்று பிதா வாக்குப்பண்ணியிருக்கிறார் அவர் நம்மையே சுமக்கும்போது, நமது கவலைகளாகிய பாரத்தை என் சுமக்கமாட்டார்? நாமே அந்த மூட்டையை நமது தலையில் வைத்துக்கொண்டால் அவர் என்ன செய்வார்? ஆகையால் நமது பாரத்தை அவரிடமே விட்டுவிடுவது நமது கவலைக்குப் பரிகாரம்.

பிள்ளைகளின் அப்பம்

முச்சட்ட விதிகள்

1. நாம் அடக்கியாளவேண்டியவைகள் மூன்றுண்டு. அவை யாவன: குணம், நாக்கு, நடத்தை.
2. மனேவிர்த்தி செய்யவேண்டியவைகள் மூன்றுண்டு. அவை யாவன: தைரியம், அன்பு, சாந்தம்
3. மெச்சிக்கொள்ளப்படத்தக்கவைகள் மூன்றுண்டு. அவை யாவன: சாமர்த்தியம், உழைப்பு, முயற்சி.
4. வெறுத்துத்தள்ள வேண்டியவைகள் மூன்றுண்டு. அவை யாவன: குரூரம், மேட்டிமை, நன்றியில்லாமை.
5. ஆசிக்க வேண்டியவைகள் மூன்றுண்டு. அவையாவன: சுகம், சினேகிதர், திருப்தி.
6. ஆச்சரியமானவைகள் மூன்றுண்டு. அவையாவன: பிரஸ்தாபம், காருண்யம், யூகம்.
7. நாம் கொடுக்க வேண்டியவைகள் மூன்றுண்டு. அவை யாவன: வறுமையுற்றோர்க்குத்தருமம், சஞ்சலப்படுவோர்க்கு ஆறுதல், மேன்மையானவைகளை மதிக்குதல்

(— வேத ஆராய்ச்சி மாலிகை)

பிரசங்கக் குறிப்புகள்

(கனம் தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்)

நீங்கள் கவலைப்படுகிறதென்ன? (மத். 6 : 28)

நமது விருப்பத்துக்கும் எதிர்பார்க்குதலுக்கும் விரோதமாய்க் காரியங்கள் சம்பவிக்கும்போது மனதிலுண்டாகும் குழப்பம், துக்கம், விசாரமே கவலையாகும். நமது குடியிருப்பு, கல்வி, உத்தியோகம், பிழைப்பு, சுகம் இவை யாவும் திருப்தியாயிருக்கும்போது நாம் சந்தோஷமாயிருப்போம். இவைகளுக்கு இடையூறுகள் நேரிடும்போது

மனங்கலங்கிக் கவலைக்குள்ளாகிறோம், கவலைக்குத் தப்பினவன் ஒருவனுமில்லை. வேலையின்மை, வியாதி, தரித்திரம், விக்கினம், நிந்தை, அவமானம், மரணம் முதலியவற்றால் மக்கள் படும்பாடு கொஞ்சமல்ல. யாரிடம் போவோம்? எங்கே குடியிருப்போம்? என்னத்தை உண்போம்? என்னத்தை உடுப்போம்? எப்படிபிழைப்போம்? என்கிற கவலைகள் நமது மனதைப் புண்ணாக்கி நம்மை ஆறாத்துயரத்தில் அமிழ்த்துகின்றன. நம்மை ஆட்கொண்ட பகவான் மனுமக்கள் நடுவில் சஞ்சரித்தபோது, அவர்கள் பற்பல கவலைகளால் மனம் நொறுங்கித் தவிப்பதைக் கண்டு அவர்களுக்காகப் பரிதபித்தார். கவலை தன்னிலே பிரயோஜனமற்றதென்றும், பரமபிதாவின் பராமரிப்பை அறியாததே கவலைக்குக் காரணமென்றும், கவலைக்குப் பரிகாரம் இன்னதென்றும் ஜனங்களுக்குப் போதித்தார்.

கவலையும் முன் யோசனையும்

கவலைக்கும் முன் யோசனைக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. ஆண்டவர் கவலையைக் கண்டித்தாரேயொழிய, முன் யோசனை, முன் ஜாக்கிரதையை அவர் கண்டிக்கவில்லை ஆகாரமில்லையே, என்று மூலையில் படுத்துக்கொள்வது கவலையாகும். புறப்பட்டுப்போய் ஏதாவது ஒரு வேலைசெய்து காசு சம்பாதிப்பது முன்யோசனையாகும் காரியத்தில் கவனம், எச்சரிக்கை, முன் யோசனை இல்லாததே கவலைக்குக் காரணம். கவலை வேறே முன் யோசனை வேறே விசாரத்தில் ஆழ்ந்தவன் ஏதும் செய்ய முடியாதவனாகிறான். தீராத கவலை தீங்கையும்; அமர்ந்த யோசனை நன்மையையும் விளைவிக்கும்.

கவலையால் உண்டாகும் கேடுகள்

(a) கவலை கலக்கத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கும். கவலை நம்மை ஆண்டுகொள்ளும்போது நமது மனம் குழம்பி இருதயம் கலங்குகிறது. (யோ. 14 : 1; லூக். 10 : 41) நாம் கவலைக்குள்ளாகும்போது, நமது சித்தம் தடுமாறி புத்தி குழம்பும் ஒன்றும் செய்ய முடியாத நோயாளியைப் போலாகிறோம அல்லது பதஷ்டமாக ஏதாகிலும ஒன்றை மதியீனமாய்ச் செய்கிறோம். நமக்கு நேரிடும் நஷ்டத்தைப் பார்க்கிலும் அதைப்பற்றிய விசாரமே அதிகத் தீங்கை உண்டாக்கும்.

(b) கவலை அவநம்பிக்கையை உண்டாக்கும். கவலை நம்மை ஆண்டுகொண்டால் கர்த்தர் பேரில் இருக்கவேண்டிய நம்பிக்கை அற்றுப்போகும். சீஷர்கள் காற்றின் மும்முரத்தையும் கடலின் கோஷ்டத்தையும் கண்டு கலங்கினபோது, ஆண்டவர் அவர்களைப் பார்த்து "உங்கள் விசுவாசம் எங்கே?" என்று கேட்டார். கவலை

நமது சரீரத்தையும் தாக்குகிறது. மனங்கலங்கும்போது போஜனத்தின்மேல் பிரியம் அற்றுப்போகிறது. தண்ணீர் வாய்க்குக் கசப்பாகிறது கண்களுக்கு நித்திரை வருகிறதில்லை. நாம் படும் அவஸ்தையைப் பார்த்து ஆண்டவர்: உங்கள் விசுவாசம் எங்கே? பிதாவின் மீதுள்ள உங்கள் நம்பிக்கை எங்கே? என்கிறார் அவர் அன்பாய்க் கேட்கும் இக்கேள்விகூட நமக்குச் சங்கடமாயிருக்கிறது. ஏனென்றால் நாம் படும் அவஸ்தையில் அவர் அன்பை நம்புவது நமக்குக் கஷ்டமாயிருக்கிறது.

பிதா அன்புள்ளவரானால் நான் ஏன் இப்படிக் கலங்கவேண்டும்? எனக்கேன் இந்தத் துன்பம்? நான் என்ன செய்வேன்? என் கவலை என்றால் சகிக்க முடியவில்லையே என்று புலம்புகிறோம். அவ்வேளையில் ஆண்டவரை உறுதியாய் நம்பமுடியவில்லை. நாம் எவ்வளவு கவலைப்பட்டபோதிலும் அந்தக் கவலையால் மாத்திரம நமக்கு விமோசனம் வராது. நமது கஷ்டங்களையும் நமது மன வியாகுலங்களையும் ஆண்டவர் அறியாதவரல்ல. நமக்குக் கவலைகள் உண்டென்று அவர் அறிவார் ஆனால் பிதாவின் மீது நம்பிக்கை வைக்கும் நம்பிக்கையினால் கவலைகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்பதே அவருடைய போதனை இதெல்லாம் உண்மைதான் ஆகிலும் துன்பங்கள் நேரிடும்போது கவலைப்பட்டுக் கலங்காதிருக்க முடியவில்லை. அன்புள்ள பிதாவை நாம் மறுதலிக்கவில்லை அவர் வல்லமையைச் சந்தேகிக்கிறதில்லை அப்படியிருந்தும் காரியங்கள் மனதுக்கு சஞ்சலமாய் நேரிடும்போது எப்படிக் கவலைப்படாதிருக்கமுடியும் என்று கேட்கிறோம் பிதாவின் மீதுள்ள நம்பிக்கை கவலையை மாற்றும் என்பதை அறிவோம். அவரை நம்பும்போதே கவலையும் கூடவேயிருப்பதற்குக் காரணம் என்ன? பிதாவை நாம் காண்பதைப்பார்க்கிலும் நமது பாடுகள் அதிகப்பிரத்தியக்ஷமாய் நமக்குக் காணப்படுகின்றன. அவர் அன்பு நமது இருதயத்தை ஆளுவதைப் பார்க்கிலும நாம் அனுபவிக்கும் துன்பம் அதிகப் பலமாய் நம்மை ஆண்டுகொள்கிறது. இதுவே நமது கவலைக்கும் கலக்கத்துக்கும காரணம்.

கவலையால் ஒரு பிரயோஜனமுமில்லை. "கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?" என்று ஆண்டவர் கேட்கிறார். கவலையால் ஒரு முழமல்ல, ஒரு அங்குலமாகிலும் கூடுவதில்லை. "மிகவும் அற்பமான காரியமுதலாய் உங்களால் செய்யக்கூடாதிருக்க நீங்கள் கவலைப்படுகிறதென்ன"? என்கிறார். எத்தனை மணி நேரமாய் எத்தனை நாட்களாய் நாம் கவலை என்னும் மஞ்சத்தில் படுத்துப்புரண்டாலும் கடுகளவு நன்மை ஏற்படப்போவதில்லை கவலையால் காலநஷ்டமும், வேலை நஷ்டமும், கடவுள் மீது அவநம்பிக்கையுமே கைகண்ட பலனாகும்.

கவலைக்குப் பரிகாரம்

நமது பாவங்களாலும் பல காரணங்களாலும் கவலைக்கு ஆளானோம். கவலையற்ற மனுஷன் உலகில் இல்லை அப்படியானால் கவலைக்குப் பரிகாரம் என்ன?. அதை மூன்று வார்த்தையில் சொல்லி விஸ்தரிப்போம், தெரியப்படுத்தல், வைத்துவிடல், தேடுதல் என்பவைகளே.

1. தெரியப்படுத்தலைப்பற்றி பரி பவுல் பேசுகிறார் இது அவர் தமது அனுபவத்தில் கண்ட நிச்சயமான விஷயம். "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்; அப்பொழுது.......தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் .... காத்துக்கொள்ளும்" (பிலி. 4 : 6, 7) பிலிப்பி சபை உபத்ரவப்பட்டசபை எங்கே உபத்திரவங்களுண்டோ அங்கே கவலையுமுண்டு பரி பவுல் தமது அனுபவத்திலிருந்து சொல்லுகிறார். கவலைப்பட்டுக்கொண்டிருப்பதால் கவலை நீங்காது. காரியங்களை உள்ளபடி, ஒன்றையும் மறைக்காமல் பிதாவுக்குத் தெரியப்படுத்தவேண்டும் அடக்கி வைப்பதில் பிரயோஜனமில்லை நமது துயரங்களை ஆண்டவர் பாதத்தில் அன்னாளைப் போலக் கொட்டும வரைக்கும் நமக்கு ஆறுதல் கிடையாது. "அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை" (1 சாமு 1 : 18 கொடிய கவலை ஊக்கமான மன்றாட்டுக்கும் ஊக்கமான மன்றாட்டு பெரிய வெற்றிக்கும் வழிநடத்தும ஆகையால் நமது கஷ்டம் கவலையை உள்ளபடி பிதாவுக்குத் தெரிவிப்பதே கவலைக்குப் பரிகாரம்

2. வைத்துவிடுதலைப்பற்றி பேதுரு சொல்லுகிறார்.

"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளை எல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" (1 பேது 5 : 7) இங்கே ஒரு காரியம் நமக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் கொடுக்கிறது. பரம பிதா நமது க்ஷேமங்களை விசாரிக்கிறவர். எல்லாம் வல்ல கடவுள் தமது பிள்ளைகளின் க்ஷேமத்தை விசாரிக்கிறவராய் இருக்கிறார் கடவுள் எவ்வுளவு பெரியவர் என் காரியங்களை அவர் கவனிப்பாரா என்று நாம் நினைக்கிறோம் அவர் விசாரியாத காரியமில்லை. அவர் தமது அருமைப் பிள்ளைகளை விசாரிக்காவிட்டால் வேறு யார் நம்மை விசாரிப்பது? அன்புள்ள பிதா நம்மை நாள்தோறும் விசாரிக்கிறார் இன்று உன்சுகம் எப்படி? பிள்ளைகள் காரியங்கள் எப்படி? செலவுக்குப் பணமில்லையோ? சாப்பாட்டுக்குக் கஷ்டமுண்டோ? இன்னார் உன்னை நிந்தித்தது உன்மனதுக்கு வேதனையாயிருக்கிறதோ? மக்கள் உத்தியோகம், விவாக விஷயங்களில் கவலைப்படுகிறாயோ? என்பதுபோல் நமது காரியங்களை அனுதாபத்தோடு விசாரிக்கிறார். விசாரிப்பது மட்டுமல்ல, நமக்கு உதவி செய்யவும் வல்லவராயிருக்

கிறுர். அவர் நம்மை விசாரிக்கிற தகப்பனுயிருக்கிறபடியால், நமது கவலைகளை எல்லாம் 'அவர்மேல் வைத்துவிடவேண்டும்' என்று பேதுரு தமது அனுபவத்திலிருந்து சொல்லுகிறுர். பவுல் தெரியப் படுத்தச் சொன்னுர். பேதுரு தெரியப்படுத்துவது மாத்திரமல்ல. அவைகளை அவரிடமே வைத்துவிட வேண்டும் என்கிறுர். கவலைகளை ஒரு மூட்டை போல் கட்டி அதை ஆண்டவரிடம் விட்டுவிட வேண்டும் என்பது போன்ற கருத்து. சங்கீதக்காரனுக்கு "கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு" என்று சொல்லியிருக்கிறுர். நமதாண்டவரும் பற்பல கவலைகளால் ஜனங்கள் அமிழ்த்தப்படுவதை அறிந்து "வருத் தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே..........வாருங்கள்.......... உங் களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றுர். நமது கஷ்டங்களை பிதாவுக்குச் சொல்லுவதோடுகூட அந்தப் பாரத்தை அவரிடம் விட்டுவிடவும் வேண்டும். ஜெபித்தபின் கவலையிருககக்கூடாது.

3 தேடுதலைப்பற்றி இயேசுபெருமான் சொல்லுகிறுர்.

நீங்கள் தேவ ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல் லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும் என்றுர் நமது கவலைகளைப் பிதாவுக்குத் தெரியப்படுத்தி அவைகளை அவரிடம் விட்டுவிட்டபின் நமது மனம் வெறுமையாயிருந்தால் போனகவலைகள் திரும்பவும் வந்து நம்மை ஆண்டுகொள்ளும். கவலை மனதுக்குரியது ஆகை யால் நமது மனம வேறு காரியங்களில் முயற்சியாயிருக்கவேண்டும். அந்த வேறு காரியங்கள் ஆவிக்குரிய தேவ காரியங்கள். அநேகர் தங்கள் கவலைகளைப் போக்க வேடிக்கை கண்காட்சிகளில் தங்கள் கவனத்தைச் செலுத்துகிறுர்கள். அதில் பிரயோஜனமில்லை. எல் லாம் நம் விருப்பம்போல் நடந்தால் நமக்குக் கவலையில்லை. அப்படி நடப்பது முடியாத காரியமே. நம்முடைய கவலைகள் சரீரத்துக் கடுத்தவைகளைப் பற்றியே என்பது நிச்சயம். தேவகாரியங்களைக் கவனித்தால், அவற்றைத் தேடினல், நம்முடைய தேவைகளை ஆண்ட வர் அருள்வார் என்பதும் நிச்சயம். "இவைகள் (உங்கள் தேவை; உங்களுக்கு வேண்டியவை) யாவும் கூட கொடுக்கப்படும். ஆவிக் குரிய ஆசீர்வாதங்களும் பூமிக்குரிய நன்மைகளும் கொடுக்கப்படும். ஒருவன் கடவுளுக்குரிய காரியங்களைப் பிரதானமாய்த் தேடும்போது, அவர் அவனுக்குத் தேவையான நன்மைகளைக் கொடுப்பதில் உண் மையும் ஜாக்கிரதையுமாயிருக்கிறுர். அவர் ஆளுகைக்குட்பட்டு, அவர் சித்தப்படி பிழைப்பதே அவரைத் தேடுவதாகும். கவலைக்குப் பரி காரம் அதுவே.

இயேசுவின் ஜெபப்பள்ளி

பதினோராம் பாடம்

'பெற்றுக்கொண்டோம் என்று நம்புங்கள்'

அல்லது

கேட்பதைப் பெறுகிற விசுவாசம்.

ஆகையால் நீங்கள் எவைகளை ஜெபித்துக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று நம்புங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்குக் கிடைக்கும் என்று சொல்லுகிறேன்.' (மார்க்கு 11 :24)

இது எவ்வளவு அருமையான வாக்குத்தத்தம். மகா பெரியது, மகா தெய்வீகமானது அற்ப இருதயமுடைய நாம் அவ்வாக்குத்தத்தத்தை ஏற்கத் திகைக்கிறோம். அவ் வாக்குத்தத்தின் வல்லமை நமக்குள் கிரியை செய்யவிடாதபடி, நாம் அதன் எல்லையை மட்டுப்படுத்த நாடுகிறோம். அவர் சொன்னபடியே, அந்த வாக்குத்தத்தம் நமக்குள் பிரவேசிக்கவும், நமது இருதயங்களைப் பெருப்பிக்கவும், அதன்மூலம் அவரது அன்பும் வல்லமையும் நமக்குச் செய்யக் காத்திருக்கிற எல்லாவற்றையும் செய்யவும் இடம தராதிருக்கிறோம். கடவுளுடைய வார்த்தையின் சத்தியத்தைப்பற்றிய கொள்கைதான் விசுவாசம் என்பது தவறு இன்னது செய்வேன் என்று கடவுள் சொன்னதைக் கேட்டகாதே விசுவாசம். நாம் சொல்லியபடி செய்ததைக் கண்ணாரக் கண்ட கண்ணே விசுவாசம. ஆகையால் எங்கு விசுவாசம் இருக்கிறதோ அங்கு கட்டாயம் பதில் வரவேண்டும். 'பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள்' என்று அவர் சொன்னதை மட்டும் நாம் நிறைவேற்றினால், 'அவைகள் உங்களுக்குக் கிடைக்கும்' என்று அவர் வாக்குப்பண்ணினதை அவர் கட்டாயம் நிறைவேற்றுவார். 'இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதை, தமமுடைய கரத்தினால் நிறைவேற்றினார்' (2 நாளா. 6 : 4) என்ற சாலொமோனுடைய ஜெபத்தின் திறவுகோலாகிய இதுவே எல்லா ஜெபங்களுக்கும் ஏற்ற திறவுகோலாகும். கடவுள் வாயால் சொன்ன வாக்கைத தமது கரத்தினால் நிறைவேற்றுகிறார். இந்தச் சிந்தையோடு இயேசுநாதர் தந்த வாக்குத்தத்தத்தை ஆராய்வோம். அவ் வாக்கின் ஒவ்வொரு பகுதியும் தெய்வீகச செய்தியையுடையதாயிருக்கிறது.

'எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகள்' நமது மனித ஞானம் இதனைச் சந்தேகிக்கிறது. 'இது எழுத்தின் பிரகாரம் உண்மைதானா'? என்று கேட்கிறது. அது உண்மையாயில்லாவிட்டால் 'கேட்பவையெல்லாம்' என்று ஆண்டவர் அழுத்தம் திருத்த

மாகச் சொல்லியிருக்கமாட்டார். இப்படி அவர் சொன்னது ஒருதர மட்டுமன்று பலதடவை சொன்னார் ' நீங்கள் விசுவாசமுள்ளவர் களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம பெறுவீர்கள் '. (மத் 21 : 22) இவ் வாக்குத்தத்தத்திற்கு ' கடவுள் சித்தத்திற்கிசைய இருந்தால் ' என்ற அடைமொழிகளைக் கூட்டி இந்த வாக்குத்தத்தத்தைப் பலவீனப்படுத்துவது மனிதனின் சுபாவ மாயிருக்கிறது இப்படிச் செய்வது அபாயமானது ஆண்டவரின் வார்த்தைகளைக் கையாளுவதில் ஜாக்கிரதையாக இருப்போமாக. ' விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் ஆகும் '. உங்களுக்கு விசுவாச மிருந்தால் உங்களால் ஆகாதது ஒன்றுமில்லை என்பவைகள் மற்ற இடங்களில் ஆண்டவர் சொன்னவை. 'அவையுள்ள இடங்களைக் கண்டறிக விசுவாசியின் பக்குவப்படுத்தப்பட்ட இருதயத்தில் கடவுள் வாக்கின்மூலம் ஆவியானவரால் முற்றும் கிரியை செய்யப் பட்டுண்டாவதே விசுவாசம் ஆகையால் விசுவாசம் வெற்றி பெறு வது நிச்சயம். வரப்போகிற தேவ பதிலுக்கு விசுவாசம் அச்சார மும், முன் தூதனுமாயிருக்கிறது. அவர் வாக்குத்தத்தம் முழுவதும் உண்மை.

ஆண்டவர் அடிக்கடி பயன்படுத்தும் 'அனைத்தும்' (All things) என்ற சொல்லின் மந்திர சக்தியைப் பாருங்கள். விசுவாசம் எவ் வளவு வல்லமையுடையது என்று காட்டுகிறது. நமது தலைவர் தமது வல்லமையில் அங்கங்களாகிய நம்மைப் பங்கு பெறுமாறு அழைப்பது எத்தனை உண்மை என்பதைத் துலக்குகிறது. கடவுளைத் தமது பரமபிதாவாக முற்றும் விசுவாசிக்கும் பிள்ளைக்குத் தமது வல்லமையை முற்றும் அதன் இஷ்டத்திற்கு ஒப்படைப்பதை அது விளக்குகிறது. ' அனைத்தும் ' என்ற சொல்லே விசுவாசத்தின் உணவும் பலமும். இதனைப் பலவீனப்படுத்துவது விசுவாசத்தையே பலவீனம் செய்வதாகும் ' எதுவாயினும் ' (whatsoever) என்பது நிபந்தனையற்றது. நம்புவதில் அடங்கிய ஒரே ஒரு நிபந்தனை தவிர வேறில்லை. நாம் ஒன்றை வாசிக்குமுன், அதுபற்றிக் கடவுள் சித்தம் என்ன? என்பதைக் கண்டறிதல் வேண்டும். சத்திய வேதத்தின், பரிசுத்தாவியின் செல்வாக்கிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஆத்மீகப் பயிற்சியே விசுவாசம் ஆனால் ஒருதரம் நாம் விசுவாசிக்கும்போது, சாத்தியமாகாதது ஒன்றுமில்லை. ' அனைத்தும் ' என்ற வாக்கை இதுவே சாத்தியமானது என்று நாம் எண்ணுகிற கீழான மட்டத் திற்குக் கொண்டுவராதிருக்கும்படி கடவுள் காப்பாராக. கிறிஸ்து வின் 'எதுவாயினும்' (whatsoever) என்பதையே நமது விசுவாசத் தின் அளவையாகவும் எதிர்பார்க்கும் நம்பிக்கையாகவும் கொள்வோ மாக. அது ஒரு விதைச் சொல் (seed-word). அவர் கூறுகிற படியே நமது இதயமாகிய நிலத்தில் கொள்வோமாயின், அது முளைத்து, வேரூன்றித் தழைத்து ஏராளமான பலனையளிக்கும்.

நீங்கள் ஜெபித்துக் கேட்டுக்கொள்கிறவைகள் அனைத்தும் எதுவா
யினும். இங்கு கூறப்படும் 'அனைத்தும்' ஜெபத்தில் கேட்டுப் பெற
வேண்டும் அவற்றைப் பெறுகிற விசுவாசம் ஜெபத்தின் கனியாம்.
ஒரு வகையில் ஜெபத்திற்கு முன் விசுவாசம் வேண்டும். மற்றொரு
வகையில் விசுவாசம் ஜெபத்தின் வளர்ச்சியும் விளைவுமாகும். ஆண்ட
வரின் நேர்முகப் பிரசன்னத்திலே, அவரோடு தொடரும் சம்பா
ஷணையிலேதான், முதலில் எட்டாததாயிருந்ததை விசுவாசம் பற்றிப்
பிடித்துக்கொள்கிறது ஜெபத்தில்தான், நமது விருப்பங்களை கடவு
ளின் புனிதத் திருச் சித்தத்தின் ஒளிக்குக் காட்டுகிறோம். அப்
போது நம் நோக்கங்கள் பரிசோதனை செய்யப்படுகின்றன. இயே
சுவின் நாமத்தினால் கடவுளுடைய மகிமைக்கென்றே நம் விண்ணப்
பங்கள் உள என்பது அப்போதுதான் மெய்ப்பிக்கப்படுகிறது.
சரியான காரியத்தை, சரியான ஆவியோடு கேட்கிறோமா என்பதை
நமக்குக் காட்ட, ஆவியின் நடத்துதலுக்கு நாம் காத்திருப்பதும்
ஜெபத்திலேதான். ஜெபத்திலேதான் நமது விசுவாசக் குறைவை
உணர்கிறோம். 'நாம் விசுவாசிக்கிறோம். நம்பிக்கையால் விடாது
முயல்கிறோம் என்பதால் நமது விசுவாசம் மெய்யென்று காட்டு
கிறோம்' என்று சொல்லும்படியாக நடத்தப்படுவதும் ஜெபத்தா
லேயே. ஜெப மூலமாகத்தான் ஆண்டவர் விசுவாசத்தை எழுப்பிக்
கற்பிக்கிறார். ஜெபிக்கத் தாமதிப்பவனும் ஜெபத்தில் இளக்கரிப்பவ
னும் பதிலைப்பெறும் அளவுக்கு விசுவாசமில்லாமையால் விசுவாசிக்க
ஒருநாளும் பழகமாட்டான். ஜெபித்துக் கேட்கத் தொடங்குகிற
வன் விசுவாசத்தின் ஆவியை நிச்சயமாய்ப் பெறுவான்.

'பெற்றுக்கொண்டோம் என்று நம்புங்கள்'. நாம் நம்பவேண்டி
யது யாது? நாம் கேட்கிறவைகளையே நாம் பெறுகிறோம் என்
பதையே நம்பவேண்டும். நாம் கேட்டதொன்றிருக்க நமக்கு நல
மான வேறொன்றை பரமபிதா கொடுப்பார் என்று ஆண்டவர் கூற
வில்லை. பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோகும்படி விசு
வாசிக்கிற அந்த மலைக்கே அவ்வாறாகும். நமது தினசரி வாழ்க்
கைக்குத் தேவையான பற்பல காரியங்களைப்பற்றிப் பிள்ளைகள்
என்ற முறையில் பிதாவிடம் ஜெபித்து, அவற்றைக் கொடுப்பதும்
கொடுக்காததும் அவருடைய இஷ்டம் என்று விட்டுவிடுகிறோம்.
இது நம்பிக்கையின் ஜெபம் (Prayer of trust) ஆனால் இயேசு
நாதர் கூறுகிற விசுவாசத்தின் ஜெபமோ இதிலும் வேறுபட்டது.
இதிலும் உயர்ந்தது. நமது ஆண்டவரின் திருப்பணிக்குரிய உன்னத
காரியங்கள் என்றாலும், நமது தினசரி வாழ்க்கைக்குரிய சின்னஞ்
சிறு அற்பக் காரியங்கள் என்றாலும், பரமபிதாவை மகிமைப்படுத்
தக்கூடியது விசுவாசமே தவிர வேறெதுவுமில்லை. கடவுள் தமது
வாக்குத்தத்தத்தைக் கட்டாயம் நிறைவேற்றுவார் என்று கன்மலை
யின்மேல் அவ் விசுவாசமாகிய கட்டடம நிற்கிறது எனவே அது

கேட்பது எதுவோ அதனை நிச்சயமாயடையும். இதனையே மார்க்கு 11 : 23ல் எவ்வளவு துலக்கமாய்த் தெளிவுபடுத்துகிறார் பாருங்கள். ‘எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.’ இயேசுநாதர் வற்புறுத்தும் விசுவாசமுள்ள ஜெபத்தின் ஆசீர்வாதம் இதுவே.

‘பெற்றுக்கொண்டோம் என்று நம்புங்கள்’ இதன் பொருளைப் பலர் விளங்கிக்கொள்வதில்லை. பெற்றுக்கொண்டோம் என்று நம்புங்கள். எப்பொழுது? ஒன்றைப்பற்றி ஜெபிக்கும்போதே அதனைப்பெற்றுக்கொண்டதாக நம்பவேண்டும். இது விந்தையிலும் விந்தையன்றோ? ஒரு பொருளைக் கொடுக்கக் கேட்கிறோம் இன்னும் அது அருளப்படவுமில்லை நம் கைக்குக் கிட்டவுமில்லை. கண்ணுக்கு அது காணப்படவுமில்லை இந்த நிலையில்தான் நம்மை ‘பெற்றுக்கொண்டோம் என்று நம்புங்கள்’ என்கிறார் நம்குரு. இது எப்படி? ஜெபத்தின் பதிலைப் பெற்றுக்கொள்வதோ ஒத்துக்கொள்வதோ, இயேசுவை அல்லது மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதும் ஒத்துக்கொள்வதுமாகும். இது ஆன்ம விஷயம். உணர்ச்சி உலகினுக்கப்பாற்பட்ட விசுவாசத்தின் செயல். நான் மன்னிப்பு வேண்டிவரும்போது பரத்தில் இயேசு எனக்காக இருக்கிறார் என்று அவரை ஏற்றுக்கொள்ளுகிறேன். கடவுள் வாக்குக்கிசைந்த நான் ஒரு விசேஷ வரப்பிரசாதத்திற்காக வரும்போது நான் கேட்பது எனக்குக் கொடுக்கப்படுகிறது என்று நம்புகிறேன். விசுவாசத்தில் அதைப் பெற்றுக்கொண்டோம. அதைக் கையால் எடுக்கிறேன் என்று நம்புகிறேன். அது என்னுடையது என்று கடவுளுக்கு நன்றிகூறுகிறேன். நாம் கேட்பது எதுவாயிருந்தாலும அது கேட்கப்படுகிறது என்பதை நாமறிந்தால் அவரிடம் கேட்டவைகளைப் பெற்றிருக்கிறோம் என்பதையும் அறிவோம்.

‘அவைகள் உங்களுக்குக் கிடைக்கும்’. பரத்திலிருந்து அருளப்பட்டதாக, விசுவாசத்தினால் பற்றிக்கொள்ளும் இந்த ஈவானது, நமது அனுபவத்திலும், நம்முடைய பொருளாகிறது. நமது ஜெபம் கேட்கப்பட்டுக் கேட்டதைப் பெற்றுக்கொண்டோம் என்று நாம் ஒருதரம் அறியும்போதும், அதிக நேரம் ஜெபிப்பது அவசியமா? அத்தகைய ஜெபம் அவசியமில்லாத சமயங்களும் உண்டு. அதாவது நமது நம்பிக்கையை விடாது, நமது அனுபவத்தில் அதனை இன்னும் பெறாதிருந்தும், விசுவாசத்தில் அவற்றைப் பெற்றுக்கொண்டதாக நன்றி கூறும்போது அது அவசியமில்லை பெற்றுக்கொண்ட விசுவாசமானது விடாமுயற்சியான ஜெபத்தில் இன்னும் பரிசோதிக்கப்

படவும், பலப்படுத்தப்படவும் அவசியமாயிருக்கிற சமயங்களும் உண்டு. விசுவாசத்திற்குக்கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் நமக்குள்ளும் நமக்குப் புறம்பேயும வெளிப்படுத்தப்படத்தக்க தகுந்த காலத்தைக் கடவுளே அறிவார். எலியா மழை பெய்யுமென்று அறிந்தான். கடவுளும் வாக்குச் செய்திருந்தார். ஆயினும் எலியா மழைக்காக ஏழுதரம் ஜெபிக்கவேண்டியிருந்தது. அவனுக்கு ஜெபம் விளையாட்டாகவோ, வெளிவேஷமாகவோ இல்லை. அவனது இருதயத்தில் ஜெபமானது ஒரு ஆத்மீக மெய்ப்பொருளாயிருந்தது. ஆகையால்தான் பூலோகததிலும், ஜெபம் கிரியை செய்கிற மேலோகத்திலும், மழைக்காக வேண்டிக்கொண்டிருந்தான். விசுவாசத்தின் மூலமாகவும பொறுமையின் மூலமாகவுமே கடவுள் வாக்குத்தத்தங்களை நாம் சுதந்திரித்துக்கொள்கிறோம் பரத்தில் அருளப்பட்ட ஈவானது பூமியில் கண்ணால் காணப்படும்வரைக்கும் பொறுமையானது விடாது ஜெபிக்கச் செய்கிறது. "பெற்றுக்கொண்டோம் என்று நம்புங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்குக் கிடைக்கும்". பரத்தில் பெற்றுக்கொண்டோம் என்பதற்கும, உலகில் கிடைக்கும் என்பதற்கும் ஊடே நம்புங்கள Between the *have received* in heaven and the *shall have* of earth, *believe;*) நம்புகிற துதியும் நம்புகிற ஜெபமும் ஒன்றுக்கொன்று இணைபிரியாதது.

இன்னொரு விஷயத்தையும் அறிந்துகொள்ளுங்கள். இதைச் சொன்னவர் இயேசுநாதரே. வானம் திறவுண்டிருப்பதையும், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரமபிதா நாம் விசுவாசத்தினால் கேட்கிறவை எவை என்றாலும் கொடுப்பதையும், நாம் காணுமபோது, நமக்குக் கிடைத்த சிலாக்கியத்தைப் பயன்படுத்தாது எத்தனையோ தரம் தவறி இருக்கிறோம் என்று வெட்கப்படுகிறோம். நமக்கு எட்டத்தக்க தூரத்தில் கண்கூடாக வைக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள நமது குறைவான விசுவாசம் போதாதே என்று பயப்படுகிறோம். ஆனால் ஒரு விஷயம் நம்மையும் நமது நம்பிக்கையையும் பலப்படுத்த வேண்டும். அதாவது பரமபிதாவிடமிருந்து பெற்று இந்தச் செய்தியை நமக்குக் கொண்டுவந்தவர் இயேசுகிறிஸ்து நாதர் என்பதை மறக்கலாகாது அவரே அவரது மாம்ச நாட்களிலே இவ்வுலகில் விசுவாசமும் ஜெபமும் நிறைந்த வாழ்க்கை நடத்தினார். அத்திமரத்திற்கு அவர் செய்ததைச் சீடர் கண்டு வியப்புற்றபோது, அவர் செய்தது போலவே அவர்களும் செய்ய முடியும என்றார். அததிமரத்தை மட்டுமல்ல, பெரு மலையும் தன்னிடம விட்டுப் பெயர்ந்து சமுத்திரத்தில் விழும்படி செய்ய அவர்களால் முடியும் என்றும் கூறினார். அவரே நமது உயிர், நமது வாழ்வு, நமது எல்லாம். உலகிலிருந்த அவரது முழுமையும் இன்று இப்பொழுது நமதே அவர் போதிப்பதெல்லாம் அவர் மெய்

யாகவே கொடுக்கிறார். அவரே நமது விசுவாசத்தின் ஆக்கியோனும் முடிப்பவரும். விசுவாசத்தின் ஆவியை அவரே அருள்வார். அத்தகைய விசுவாசம் நமக்காக ஏற்பட்டது அன்று என்று அஞ்ச வேண்டியதில்லை. பரமபிதாவின் ஒவ்வொரு பிள்ளைக்கும் அது உரியது. சிறு பிள்ளையின் சிந்தையோடு, பரமபிதாவின் திருசித்தத்திற்கும், அன்புக்கும் தன்னை ஒப்புக்கொடுத்துப் பரமபிதாவின் வார்த்தையையும் வல்லமையையும் நம்புகிற ஒவ்வொருவனுக்கும் அது கிடைக்கக்கூடியது என்பதை அறிக.

இளைஞரும் பணமும்

(எழுதியவர் ஸ்ரீ ஜெயராஜ் ஆசிரியர், பசுமலை)

மதுரை இராமநாதபுர அத்தியக்ஷாதீன நிதியாளர் திரு. யோசுவா கிறிஸ்தவ இளைஞர் மாநாட்டில் செய்த சொற்பொழிவின் சுருக்கம்.

பழக்க வழக்கங்கள் இளமையில்தான் உருவாகின்றன. இன்றைய இளைஞர் நாளையப் பெரியார்கள். அவர்களுள் பலர் பணப் பொறுப்புள்ள பதவிகள் வகிக்கலாம். அப்பதவிகளில் பொதுப் பணங்களைக் கையாளும்போது, பணத்தை கையாளுவதற்குரிய சில அடிப்படை விதிகளை இளைஞர் அறிந்திருப்பது அத்தியந்த அவசியம். கிறிஸ்தவர்கள் என்ற முறையில் அப்பணப்பொறுப்புள்ள பதவிகளில் யாதொரு தவறுதலுக்கும் ஆளாகாது பொது ஜனங்கள் நம்மீது நூற்றுக்கு நூறு நம்பிக்கை வைக்கத்தக்கதாக பொதுப் பணங்களை பயன்படுத்துவதின் மூலமாக கிறிஸ்துவுக்கு சாட்சிகூறக் கடமைப்பட்டிருக்கிறோம். இதர தொழில்களில் அறியாமையின் காரணமாக ஏற்படும் பிழைகள் மன்னிக்கப்படலாம். ஆனால் பணப்பொறுப்புள்ள பதவிகளிலோ அத்தகைய அறியாமையால் ஏற்படும் பிழைகள் மன்னிக்கப்படமாட்டா. அவை வேலை நீக்கம், அபராதம் சிறைவாசம் முதலிய தண்டனைகளுக்குட்படுத்தும். ஆகையால் பணத்தைக் கையாளுவதற்கு உரிய சில அடிப்படைத் தத்துவங்களை ஆராய்வோம்.

முதலாவது சொந்தப் பணத்தையும், பொதுப் பணத்தையும் ஒன்றாக வைக்கலாகாது. திடீரென்று கையிருப்புப் பணத்தை பரிசோதிக்க நேரிடுமானால், அப்பணத்தில் ஒரு பைசாவும் கூடாது குறையவும் கூடாது. கூடுதலாயிருப்பதற்கும் குறைவாயிருப்பதற்கும் நாம் என்ன காரணம் சொன்னாலும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. ஆகையால் சொந்தப் பணத்தையும் பொதுப்பணத்தையும் தனித்தனியாக வைத்திருந்தால் இவ்வித கஷ்டத்திற்கு ஆளாகமாட்

டோம் இந்தச் சிறிய விதியை கைக்கொள்ளாத காரணத்தால், அநேகர் சிறைக்குள் சென்றிருக்கின்றர். சில சமயங்களில் கடன் வாங்குவது பாவமன்று என்றும், பொதுப் பணத்தில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு, பிறகு போட்டுக்கொள்ளலாம் என்றும் நினைக்கிறோம். ஆனால் இந்த முறையை அரசாங்கம் ஒப்புக்கொள்ளாது கடின தண்டனை அளிக்கிறது. வாங்கின பணத்திற்கும் கொடுத்த பணத்திற்கும் பதிவுகள் இருக்கவேண்டும்.

2. விசேஷ நன்கொடைகளுக்குத் தனிக் கணக்கு இருக்க வேண்டும். எந்தக் காரியத்திற்காக ஒரு நன்கொடைக் கொடுக்கப் பட்டதோ அந்தக் காரியததிற்காகவே அந்த நன்கொடையைப் பயன்படுத்தவேண்டும். அப்படிச் செய்யாமல் அதை வேறொரு காரியத்திற்காக பயன் படுத்தினல் அது குற்றமாகும்.

3. கணக்குகள் அல்லது வரவு செலவுகள் தினசரி எழுதப் படவேண்டும். திடீரென்று வேலை மாற்றமோ விபத்தோ, வியாதியோ, மரணமோ ஏற்படும் பட்சத்தில் நம்முடைய ஸ்தானத்திற்கு வருகிறவர், எவ்வித சிரமுமின்றி, அவ்வேலையைப் பார்க்கத்தக்கதாக, அந்த நிமிஷம்வரை கணக்குகள் சரியாயிருக்கவேண்டும். பணப் பெட்டியின்முன் மேஜையின்மேல் எப்பொழுதும் காஷ்புக்கும், பேனு மைக்கூடும் இருக்கவேண்டும். வரவு வருகிற பணத்தை முதலாவது காஷ்புக்கில் பதிவு செய்துவிட்டு, அதன் பின் பணப்பெட்டியில் பணத்தைப்போடவேண்டும் அப்படியே கொடுக்கிற பணத்திற்கும் முதலாவது ரசீது வாங்கிக்கொண்டு, காஷ்புக்கில் பதிவு செய்துகொண்டு, பிறகு பணப்பெட்டியைத் திறந்து, பணத்தை கொடுக்கவேண்டும் இந்தச் சிறு விதியைக் கடைப்பிடித்தால் பெரும் பயன் ஏற்படும். தவறுதல் ஏற்படாது.

4. பெற்றுக்கொண்ட பணத்திற்கு உடனே ரசீது தரவேண்டும். பணங்கொடுத்தவருக்கு ஒரு ரசீதும் ஆபீசுக்கு ஒரு ரசீதும் இருக்கவேண்டும். ஒரு பள்ளிக் குமாஸ்தா மாணவர் சம்பளத்தை வாங்கிக்கொண்டு உடனடியாக ரசீதுகள் கொடுக்காமல் ஒரு காகிதத்தில்மட்டும் குறித்து வைத்து, தன் சௌகரியப்படி ரசீதுகள் கொடுத்துவந்தார். ஒருநாள் ஒரு பையன் சம்பளம் கட்டவில்லை என்று வெளியே அனுப்பப்பட்டான் ஆனல் அந்தப்பையன் தலைமை ஆசிரியரிடம்போய், தான் ஏற்கனவே பணம் கட்டிவிட்டதாகவும், குமாஸ்தாதான் ரசீது கொடுக்கவில்லை என்று முறையிட்டான். இதை அறிந்த சம்பளம் கட்டாத மற்றமாணவரும் அதேவிதமாகவே சொன்னார்கள். பள்ளி அதிகாரிகள் விசாரித்தபோது, மேற்படி குமாஸ்தா உடனுக்குடன் ரசீது கொடுப்பதில்லை என்று கண்டு, சம்பளம் கட்டாதவர்கள் பணத்தையும் சேர்த்துக் கட்டும் படி உத்தரவிட்டனர். ஆகையால் அவர் உடனுக்குடன் ரசீது

கொடுத்திருந்தால் இக்கஷ்டம் வந்திராது. பேரில்லாத நன்கொடைகள் பெறும்போதுகூட, ரசீதுகள் போட்டு விளம்பரப் பலகையில் ஒட்ட வேண்டும்

5. எல்லா செலவினங்களுக்கும் அசல் வவுச்சர்கள் இருக்க வேண்டும்.

6. எல்லா வரவு செலவுக்கும் திட்டவட்டமான கணக்குக் கொடுக்கவேண்டும்.

இரக்ஷணிய மனோகரம்—குமாராநுபூதி (தொடர்ச்சி)

6. பொல்லா உலகத்தொடு போரா இடவும்
மல் ஆடு இதயத்தை மலைத்திடவும்
வல்லார் எவர் உன் அருள் வாய்த்திலரேல்
எல்லாம் வல யேசு தயாபரனே.

மல் ஆடு இதயம்=என்னுடன் மல்லுக்கட்டும், அதாவது மாறுபடும் மனம், என மலைத்திட=போரிட்டு வெல்ல; வாய்த்திலரேல்=(உன் அருள்) கிடைக்காவிட்டால்; எல்லாம் வல=எல்லாம் வல்ல உன் அருள் வாய்த்திலரேல் உலகத்தோடு போரிடவும், இதயத்தை மலைத்திடவும் எவர் வல்லார்?

7. பன்னப்படு பாதகர் பார்உலகில்
என்னில் பெரியார்இலை என்ன நினைந்து
இன்னல் படுபாவி எனக்கு உருகி
மன்னித்தருள்வாய் மனுவேல் அரசே.

பன்னப்படுபாதகர்=இழிவாய்ச் செய்யப்படும் பாதகருள்; என்னில் பெரியார் இலை=என்னிலும் பெரிய பாவிகள் இல்லை; இன்னல் படு பாவி எனக்கு=துக்கப்படுகின்ற பாவியாகிய எனக்கு.

8. வல்லாய்உன் அருட்செயல் வாழ்த்திடவும்
கல்லாய என் நெஞ்சு கனிந்திலதே
எல்லாம் உடையாய் உனை எய்தும்வகை
சொல்லாய் அருள்நாத சுராதிபனே.

வல்லாய்=சர்வ வல்லவனே. உன் அருள் செயல்=எனக்கு நீ செய்த அருள் நிறைந்த செயல்களை; வாழ்த்திடவும்=என் வாய் சொல்லித் துதித்தாலும். கல்லாய என் நெஞ்சு கனிந்திலதே கல்லாகிய என் மனம் உருகவில்லையே. எல்லாம் உடையாய் =சராசரம் எல்லாவற்றையும் சொந்தமாக உடையவனே. உனை எய்தும் வகை=உன்னிடம் வந்து சேரும் வழியை; சொல்லாய்=எனக்குத் தெரிவிப்பாயாக. அருள்நாத=சுர+ அதிபனே=சுரர்களுக்கு (தேவ தூதர்களுக்கு) இறைவனே.

9. உச்சிட்டம் உவந்து அலை குக்கலென
நச்சிட்ட புலன்களில் நாளும் மனம்
வச்சிட்டு அலைவுற்று மயங்கிடவோ
முச்சிட்டரோடு ஒன்றிய முன்னவனே.

உச்சிட்டம் உவந்து—பிறர் எச்சிலை விரும்பி.
அலை குக்கல் என—அலைகின்ற நாய்போல.
நச்சு இட்ட—பரவ (நஞ்சு) விஷம் கலந்த ;
புலன்களில்—மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐம் பொறி களால் அனுபவிக்கப்படும் பொருள்களில்.
நாளும் மனம் வச்சிட்டு—நாள் தவறாமல் மனத்தை வைத்து விட்டு அலைவு + உற்று—அலைந்து. மயங்கிடவோ—நான் மயங்கிடுதல் நன்றோ முசசிட்டரோடு—பிதா, குமாரன் பரிசுத்த ஆவி என்ற மூவரோடும். ஒன்றிய—ஒருவராய் விளங்கும். முன்னவனே—இறைவனே.

10. என்போல் அடியார் இடர் தீர்த்தருளற்கு
உன்போல் உரியார் இலை உண்மையதால்
பின்பே எறி என்பிழை அத்தனையும்
அன்பே உருவாகிய ஆரணனே.

என்னைப்போன்ற அடியாருடைய துன்பத்தைத் தீர்த்து விடுதற்கு உன்னைப்போன்ற உரிமையுள்ளவர்கள் இல்லை. உண்மை + அது + ஆல்—அது உண்மை ; (ஆல்—அசை) ஆரணனே, என் பாவம் அத்தனையும் உனக்குப் பின்னாலே எறிந்துவிடு (பாராமல் அகற்றி விடு). அன்பே உருவாகிய ஆரணனே—அன்பையே உன் உருவாகக் கொண்டு வேதங்களுக்கு இருப்பிடமானவனே ; ஆரணம்—வேதம்.

11. ஆகாமியன் எற்கு அருளாய் எனில் இத் +
தேகாதி சதுஷ்டய சிக்கறுமோ
ஆகாயம் அகன்று அவனிக்கு உருகி
மாகாயம் எடுத்த வரோதயனே.

ஆகாமியன்—பாவியாகிய ; எற்கு—எனக்கு : அருளாய் எனில் —கிருபை புரியாவிட்டால் ; தேக ஆதி = தேகம் முதலிய ; சதுஷ்டய—நான்கு வகையான ; சிக்கு—ஆசைக் கட்டுக்கள், அறுமோ—நீங்குமோ. ஆகாயம் அகன்று—வானுலகத்தை விட்டு ; அவனுக்கு உருகி—உலகத்தாருக்கு இரங்கி ; மா காயம் எடுத்த = சிறந்த மனித உடம்பை எடுத்த; வரோதயனே—வரங்களுக்குப் பிறப்பிடமானவனே.

சதுஷ்டயமாவன :—தனு, கரணம், புவனம், போகம் தனு—தேகம் ; கரணம்—பொறி புலன்கள்; புவனம்—உலகம் : போகம்—ஆசை.

அக்டோபர் மாதக் கி. மு. சங்கப் பொருட்கள்.

தீர்க்கதரிசிகளின் செய்தி

அக்டோபர்

1. எரேமியா கி. மு. 626—586
2. எசேக்கியேல் கி. மு 593—573
3. ஆகாய், சகரியா, மல்கியா கி. மு. 460—450
4. மெய்வணக்கத்திற்கும், பொய்வணக்கத்திற்கும் எதிர்ப்பு— ஆமோஸ் 4 : 4-13
5. „ „ „ „ „ ஆமோஸ் 5 : 21-27
6. „ „ „ „ „ ஆமோஸ் 6 : 1-6
7. „ „ „ „ „ ஆமோஸ் 7 : 10-17
8. உண்மையான மனஸ்தாபம்—கடவுளைத் தேடுங்கள் ஆமோ. 5 : 4
9. „ „ „ „ ஆமோஸ் 5 : 14
10. மீந்த கடவுளுடைய உண்மைத் தொண்டர்கள் ஆமோஸ் 9 : 11-15

ஓசியா தீர்க்கதரிசியின் செய்தி கி. மு 750—737

11. ஓசியாவின் அழைப்பு ஓசியா 1 : 1-2
12. ஓசியாவின் பரிதாபமான குடும்பவாழ்க்கை ஓசியா 1 : 3-9
13. ஓசியா மனைவியின் நம்பிக்கை துரோகம் ஓசியா 2 : 1-6
14. நம்பிக்கை துரோகம் செய்த மனைவியை இஸ்ரவேலுக்கு ஒப்பிடுதல் ஓசி. 2 : 7-13
15. யெகோவா இஸ்ரவேலை நேசித்தல் ஓசி. 2 : 14-20
16. மனைவி மீட்கப்படல் ஓசி. 3 : 1-3
17. பாடுபடுதலின்மூலம் யெகோவா இஸ்ரவேலை மீட்பார் ஓசியா 3 : 1-5

ஏசாயாவின் செய்தி கி.மு. 740—700

18. ஏசாயாவின் அழைப்பு ஏசாயா 6 : 1-10
19. மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனம் ஏசா. 9 : 1-7
20. கடவுளுடைய ராஜ்யம் ஏசா. 35
21. ஆறுதல் மொழிகள் ஏசா. 43
22. பாடுபடும் தாசன் ஏசா. 53
23. பாடுபடும் தாசன் ஏசா. 53
24. பாடுபடும் தாசன் ஏசா. 53

எரேமியா தீர்க்கதரிசியின் செய்தி கி.மு. 626—586

25. எரேமியாவின் அழைப்பு எரேமியா 1 : 6-10
26. எரேமியாவின் செய்தி எரேமி. 3 : 4
27. எரேமியாவின் சோதனை எரேமி. 20 : 1-2
28. எரேமியாவை கைது செய்தல் எரேமி. 37 : 11-15
29. எரேமியாவை சிறையில் அடைத்தல் எரேமி. 38 · 13-21
30. எரேமியாவை விலங்கிடல் எரேமி. 30 : 11-14
31. மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனம் எரேமி. 7 : 23, 30, 33

விளம்பரம்

(Audio-Visual) பிரச்சாரத்திற்குரிய சாமான்கள் பசுமலை வேதப்பாடசாலையில் இருக்கின்றன. இவைகளை உபயோகப் படுத்த விரும்பும் சபைவர்கள் கீழ்கண்ட குறிப்புகளைக் கவனிக்கும் படி கேட்கப்படுகிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள சபைகள் நமது போர்டின் மூலம் நன் கொடையாக இரண்டு (projectors) கருவிகள் அனுப்பி இருக் கின்றன. ஒன்று மின்சாரத்தாலும் மற்றொன்று கியாஸ் விளக்கா லும் இயங்கும். இவை புதிது. ஆகநன்ருய் உழைக்கும். கெட்டுப் போகாமல் நல்ல நிலைமையில் வைப்பதற்கு உதவியாக இந்த யந்திரங் களை தெரிந்தவர்கள் மட்டும் உபயோகிப்பது நல்லது விருப்ப முள்ளவர்கள் ஒரு குருவானவர், அல்லது ஸ்தாபனத்தலைவர் மூலமாய் ஏற்கனவே எனக்குத் தெரிவிக்கவேண்டும். கடன் வாங் குகிற பொறுப்பாளர் எததனை நாளைக்குள் யந்திரத்தைத் திருப்பித் தாமுடியும் என்பதை அதற்காக ஏற்பட்டுள்ள நோட்டில் கையெழுத் திடவேண்டும் கவலையீனத்தால் பொருளுக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதற்குத் தான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும். அத்தியட்சாதீன சினிமா யந்திரத்திற்கு உரிய ஒரு பாக மும் (Transformer) சில நல்ல படங்களும் இல்லாததால் அதைத் தற்போது உபயோகிக்கமுடியாது. பின்வரும பிலிம் படங்களும் கலர் ஸ்லேடுகளும் என்னிடம் உண்டு:— இயேசுக் கிறிஸ்துவின் ஜீவியசரித்திரம்

ஆமோஸ்
யோவான் ஸ்நானகன்
எம்மா ஊர் ரஸ்தா
மூன்று சாஸ்திரிகள்
பரிசுத்த பிள்ளையாகிய இயேசு
கிறிஸ்துவக் குடும்பம்
மிருகங்களின் குடி இருப்பு
பவுலின் மிஷனரி பிரயாணம்
குஷ்டரோகம்
மலேரியா

இவைகளைத்தவிர வேறு பிலிமாவது, ஸ்லேடுகளாவது தேவை யாக இருந்தால் ஏற்கனவே எனக்குத் தெரிவிக்க வேண்டும். அவை களை வாடகைக்கு வருவித்துக் கொடுக்கலாம்.

இவைகளைத்தவிர கீழ்கண்டபொருள்களின் பேரில் ஏராளமான பிரசார பிரதிகள் உண்டு. அவையாவது

சர்மவியாதிகள், இருமல், விஷக்கிருமிகள், பத்து சுகாதார விதிகள், வயிற்றோட்டம், குஷ்டரோகம், பற்களைப் பாதுகாத்தல், க்ஷயரோகம், கக்கூசுகளை சுத்தமாக வைத்தல், சுத்தம், சுகாதாரத் தைப்பற்றிய சார்ட்டுகள்.

இப்படிக்கு உங்கள் நண்பன்,
இ. இ. உவைட்.

முக்கிய அறிவிப்பு

நம்முடைய அத்தியக்ஷாதீனத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பத்திலும் பரிசுத்த வேதாகம புஸ்தகம் குறைந்த பக்ஷம் ஒன்றாகிலும் இருக்கவேண்டுமென்ற உன்னத நோக்கத்துடன் பாதிக்கிரையத்தை அமெரிக்கன் ஹோம் பைபிள் சங்கத்தார் கடந்த மூன்று வாருஷ காலங்களாக நமக்கு கொடுத்து உதவி புரிந்து வந்தார்கள் அவர்களின் கருணையால் நூற்றுக்கணக்கான வேதாகம புஸ்தகங்களை பாதிக்கிரையத்திற்கு இதுவரை நம்மக்களுக்கு கொடுத்து வந்தோம்.

மேற்சொன்ன மேற்படி சங்கத்தார் இந்த வருஷத்தில் இதுவரை கொடுத்ததோடு நிறுத்திக்கொண்டார்கள் ஆகையால் இதுமுதல் பரி. வேதாகமம் பாதிக்கிரையத்திற்கு நமது அத்தியக்ஷாதீன டிப்போவில் வாங்கிக்கொள்ள இயலாது என்ற விபரத்தை எல்லா குருமாருக்கும் கிறிஸ்தவ மக்களுக்கும் இதினால் தெரிவிக்கப்படுகிறது. ஒரு வேளை புது வருஷத் துவக்கத்தில் அதாவது 1955ல் மேற்படி பாதிக்கிரையத் தொகையை மேற்படி சங்கத்தார் கொடுத்துதவ முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்பா ஸ்ரீநிவாசன்,
மானேஜர்.

விளம்பரம்

ஓய்வு நாள் பாடசாலைகளுக்கு அறிவிப்பு

அகில லோக ஓய்வு நாள் பாடசாலை தினம் 1954 நவம்பர் 7ம் தேதி.

இத்தினம் நம் தேச முழுவதிலும உள்ள அநேக ஓய்வுநாட் ர்ளிக்கூடங்களால் ஓர் விண்ணப்ப நாளாகவும், ஸ்தோத்திர தின ர கவும் அனுசரிக்கப்படும் இத்தினத்தின் உபயோகத்திற் ஃன்று ஓர் கவர்ச்சிகரமான ஆராதனைமுறைமை தயாராகி வரு ்றது வங்காளத்தைச் சேர்ந்த கலிசாரன் பானர்ஜியின் ஜீவிய திரம் சிறு நாடக ரூபத்தில் அத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. ர் ஓர் சிறந்த கிறிஸ்தவர். கல்வித்துறையில் நன்கு உழைத்தவர். தேச பக்தர்.

ஆராதனை முறைமையின் ஓர் நகல் மட்டும் இலவசமாக பெற்றுக் ாள்ளலாம். அதற்கு மேலும் நகல்கள் வேண்டுவோர் நகல் ்றிற்கு 6 அணா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கலிசாரன் னர்ஜியின் உருவப் படம் அச்சடித்துள்ள 32 முத்திரைகள் ங்கிய ஆல்பம் ஒன்றின் விலை ரூ. 2 நாடகத்தை நீங்கள் ்றியுடன் நடத்த அநேக ஒத்திகைகள் அவசியமாதலால் உட யாக கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

இத்தினத்தைப்பற்றி அநேகருக்கறிவித்து, உங்கள் சபை அதனைக்கொண்டாட முயற்சிக்குமாறு கேட்டுக்கொள்ளு ம்.

V. M. KOSHY,
Administrative Secretary,
India Sunday School Union,
COONOOR,
NILGIRIS.

LENOX PRESS, PASUMALAI, 6—9—1954 420 C.